வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4924/அ4/2024 நாள். 25.11.2024

பொருள் : பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – சூற்றுச்சூழல் மன்ற செயல்பாடுகள் – மிஷன் இயற்கை சுற்றுச்சூழல் செயல் திட்டம் – அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்துதல் – தொடர்பாக

பார்வை : தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணைணயரின் செயல்முறைகள் ந.க.எண்.56667/எம்1/இ2/2023 நாள்.18.11.2024

----

பார்வையில் காணும் கடிதத்தின்படி, தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை WWF India துணையுடன் மிஷன் இயற்கை என்ற சுற்றுச்சூழல் செயல் திட்டத்தை அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்த உள்ளது, இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ளபடி ஒவ்வொரு பள்ளிகளிலும் 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களில் 5 மாணவர்களை தேர்வு செய்து சுற்றுச்சூழல் மன்ற பொறுப்பாசிரியர்கள் பெயரோடு WWF India Mission Eeyarkai – Green Cabine (Select Green Cabinet Members to lend the Initiatives) Google Link இல் 26.11.2024க்குள் பதிவேற்றம் செய்திட பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு இணைப்பு :

1. Registration Link (https://academy.wwfindia.org/mission Eeyarkai)
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்கநரின் செயல்முறைகள் நகல்

குறிப்பு: பள்ளியின் UDISE CODE பள்ளியின் பெயர், பள்ளி முகவரி பள்ளியின் மின்னஞ்சல் முகவரி, பள்ளியின் தொடர் அலைபேசி எண், ஆசிரியர் ஒரருங்கிணைப்பாளர் பெயர், ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் அலைபேசி எண் மற்றும் கடவுச்சொல் ஆகியனவற்றை பதிவேற்றம் செய்திட வேண்டும்.

உங்களுக்கு விருப்பமான கடவுச்சொல்லை (Password) பதிவிட்டு உறுதி செய்திட வேண்டும்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு உயர்/மேல்நிலைப்பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்,

1. மாவட்டக்கல்வி அலலுவலர்கள் (இடைநிலை)
2. மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர்